بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 02/02/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**✪உஹுது போரின் சூழ்நிலைகள் மற்றும் சம்பவங்கள் ஆகியவற்றைப்பற்றிய குறிப்பு**
**✪உலகப் போரிலிருந்து தப்பிப்பதற்கு துஆவுக்கான வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۬ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

உஹுது போர் சம்பவங்களில் சஹாபிகளுடைய தியாகங்களைக் குறித்தும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது சஹாபிகள் கொண்டிருந்த நேசம் குறித்தும் உதாரணங்களை நான் எடுத்துக் கூறினேன். இவற்றுள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் வீரச்செயல் குறித்த சம்பவங்களும் காணக் கிடைக்கின்றன.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பற்றி அறிவிப்பில் இவ்வாறு வருகிறது; உஹுது போரில் இப்னு கமியா என்பவன் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களை ஷஹீதாக்கி விட்டு பெருமானார் (ஸல்) அவர்களை ஷஹீதாக்கியதாக கருதிக் கொண்டான். ஆகவே அவன் குறைஷியர்களிடம் சென்று, நான் முஹம்மது (ஸல்) அவர்களைக் கொன்று விட்டேன் என்று கூறினான்.

ஹஸ்ரத் முஸ்அப் அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் (இஸ்லாமிய) கொடியை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் பொறுப்பில் கொடுத்தார்கள். ஆகவே ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், காஃபிர்களின் கொடியைப் பிடித்திருந்தவர்களை ஒருவர் பின் ஒருவராக வாளால் வெட்டி வீழ்த்தினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அம்ர் பின் அப்துல்லாஹ் ஜுமஹீ மற்றும் ஷைபா பின் மாலிக் ஆகியோரைக் கொன்றார்கள். அப்போது ஜிப்ரீல் (அலை) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம், நிச்சயமாக இவர் கருணை காட்ட தகுந்தவராவார் என்று கூறினார்கள். அதாவது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைக் குறித்து கூறினார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள், ஆம்! அலீ என்னைச் சேர்ந்தவராவார்; நான் அவரைச் சேர்ந்தவன் ஆவேன் என்று கூறினார்கள். அப்போது ஜிப்ரீல் (அலை) அவர்கள், நான் உங்கள் இருவரையும் சேர்ந்தவனாவேன் என்று கூறினார்கள்.

இந்த விஷயத்தை ஷியா பிரிவைச் சார்ந்தவர்கள் மிகைப்படுத்தி விடுகின்றனர். அதிகப்படுத்தி கருதுகின்றனர்.

**ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** உஹுது போரில் பெருமானார் (ஸல்) அவர்களின் அருகாமையை விட்டு மக்கள் விலகிச் சென்ற போது நான் ஷஹீதுகளின் உடல்களுக்கிடையில் (பெருமானார் (ஸல்..., அவர்களைத்) தேட

ஆரம்பித்தேன். அவற்றில் அன்னார் இல்லை. அப்போது நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறினேன். பெருமானார் (ஸல்) அவர்கள் (புற முதுகு காட்டி) ஓடக்கூடியவரும் அல்ல; ஷஹீதுகளில் அன்னாரை நான் காணவும் இல்லை. ஆனால், அல்லாஹ் நம் மீது கோபம் கொண்டுள்ளான். ஆகவே அவன் தன்னுடைய நபியை உயர்த்திக்கொண்டான். இப்போது எனக்கு நன்மை பயக்கும் பணி என்னவென்றால், நான் கொல்லப்படும் வரை போரிட்டுக் கொண்டே இருக்க வேண்டும் (என்று முடிவு செய்தேன்). ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பிறகு நான் எனது வாளின் உறையை உடைத்துப்போட்டு விட்டு காஃபிர்கள் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்தேன். அவர்கள் இங்குமங்கும் சிதறிப்போய் விட்டார்கள். அப்போது அவர்களின் நடுவில் பெருமானார் (ஸல்) அவர்களைக் கண்டேன்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் உஹுதிலிருந்து திரும்பிய பிறகு ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் தமது வாளை கழுவுமாறு கொடுத்து விட்டு, இன்று இந்த வாள் பெரும் பணியைச் செய்துள்ளது என்று கூறினார்கள். அவர்களின் பேச்சை பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பார்த்து, அலீயே! இன்று உங்களுடைய வாள் மட்டுமின்றி இன்னும் பல மக்களின் வாள்களும் தீரச் செயல்களைக் காட்டின என்று கூறினார்கள். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் ஆறு, ஏழு சஹாபிகளுடைய பெயர்களை எடுத்துக் கூறி இவர்களின் வாள்கள் உங்களுடைய வாளை விட எவ்விதத்திலும் கூர்மையற்றவையாக இருக்கவில்லை என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் அபூ தல்ஹா அன்சாரி (ரலி) அவர்களைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் எனும் நூலில் இவ்வாறு எழுதுகிறார்கள்:** "அவர்கள் அம்பெய்து, அம்பெய்து மூன்று வில்களை உடைத்து விட்டார்கள். மேலும், எதிரிகளுடைய அம்புகளுக்கு முன்னால் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நின்றவாறு பெருமானார் (ஸல்) அவர்களின் உடலைத் தமது கேடயத்தால் மறைத்துக் கொண்டார்கள்.

**ஹஸ்ரத் சஅது பின் அபீ வக்காஸ் (ரலி)** அவர்களுக்குப் பெருமானார் (ஸல்) அவர்களே அம்புகளை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் சஅது (ரலி) அவர்கள் அந்த அம்புகளை எதிரிகளின் மீது தொடர்ச்சியாக எய்து கொண்டிருந்தார்கள். ஒரு முறை பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஅது (ரலி) அவர்களிடம், உங்கள் மீது என் தாய் தந்தையர் அர்ப்பணம்! நீங்கள் தொடர்ச்சியாக அம்பெய்து கொண்டிருங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் சஅது (ரலி) அவர்கள் தமது இறுதிக் காலம் வரை இந்தச் சொற்களை மிகவும் பெருமிதத்தோடு எடுத்துக் கூறி வந்தார்கள்.

**ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி)** அவர்கள் மிக நீண்ட நேரம் வரை தமது உடலைக் கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களை மறைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்தார்கள். எறியப்பட்ட அம்புகளையும் கற்களையும் தமது உடலில் வாங்கிக் கொள்வார்கள். எந்த அளவுக்கு என்றால் அவர்களுடைய உடல் அம்புகளால் சல்லடையாகிவிட்டது."

**அடுத்ததாக ஹஸ்ரத் சஹ்ல் பின் ஹுனைஃப் (ரலி)** அவர்களைப் பற்றிய குறிப்பு. உஹுது நாளில் உறுதியாக நின்ற மகத்துவமிக்க சஹாபிகளில் இவர்களும் ஒருவர் ஆவார்கள். அந்த நாளில் இவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம்

மரணத்திற்கான பைஅத் செய்திருந்தார்கள். இவர்கள் அந்த நாளில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் கேடயமாக, உறுதியாக நின்று விட்டார்கள்.

**அடுத்ததாக ஹஸ்ரத் உம்மு அம்மாரா (ரலி)** என்ற ஒரு சஹாபியாவைப் பற்றிய குறிப்பு காணக் கிடைக்கிறது. இவர்கள் உஹுது போரில் வீரத்துடன் போரிட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், இவர்களைக் குறித்து கூறும் போது, உஹுது நாளில் வலப்பக்கமும் இடப்பக்கமும், எங்கு பார்த்தாலும் நான் அவர்களைக் கண்டேன். அவர்கள் என்னைப் பாதுகாப்பதற்காக எதிரிகளுடன் போரிட்டுக் கொண்டிருந்தார்கள் என்று கூறினார்கள்.

(உஹுது) போரில் அபூ சுஃப்யான் அவர்களுடன் நிகழ்ந்த கலந்துரையாடல் பற்றியும், குறைஷியர்கள் திரும்பிச் சென்றது பற்றியும் குறிப்பு காணப்படுகிறது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் காயமுற்று மயங்கி விழுந்ததற்குப் பிறகுள்ள சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:** கொஞ்சம் நேரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு நினைவு திரும்பியது. முஸ்லிம்களை மீண்டும் ஒன்று கூட்டுவதற்காக சஹாபிகள் நாலாபுறமும் போர்க்களத்தில் ஆட்களை அனுப்பி வைத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த மக்களை அழைத்துக் கொண்டு (மலைக்) கணவாய்க்கு சென்று விட்டார்கள். அங்கு எஞ்சியிருந்த படையைப் பார்த்து அபூ சுஃப்யான் மிகவும் உரத்த குரலில், நாங்கள் முஹம்மது (ஸல்) அவர்களைக் கொன்று விட்டோம் என்று கூறினார். பெருமானார் (ஸல்) அவர்கள் அபூ சுஃப்யான் அவர்களின் குரலுக்கு பதில் கொடுக்கவில்லை. இஸ்லாமிய படையிலிருந்து இதற்கு எந்த பதிலும் வராததைக் கண்ட அபூ சுஃப்யான் தமது எண்ணம் சரியானதுதான் என்று உறுதி கொண்டார். பிறகு, அவர் மிகவும் உரத்த குரலில், நாங்கள் அபூபக்ர் மற்றும் உமர் ஆகியோரைக் கொன்று விட்டோம் என்று கூறினார். இஸ்லாத்தினுடைய தோற்றுநரையும் அவர்களின் வலக்கரத்தையும் இடக்கரத்தையும் நாம் கொன்று விட்டோம் என்று காஃபிர்கள் உறுதி கொண்டார்கள். அப்போது அபூ சுஃப்யான் மற்றும் அவருடைய தோழர்கள் மகிழ்ச்சியில் முழக்கமிட்டவாறு, எங்களுடைய கண்ணியத்திற்குரிய ஹுபல் சிலையின் மேன்மை உயரட்டுமாக! அது இன்று இஸ்லாத்தை அழித்துவிட்டது என்று கூறினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) கூறுகிறார்கள்: தம்முடைய மரணம் குறித்த அறிவிப்பையும், அபூபக்ர் (ரலி) மற்றும் உமர் (ரலி) ஆகியோரின் மரணம் குறித்த அறிவிப்பையும் கேட்ட பிறகு மௌனம் காக்குமாறு அறிவுரை கூறிய ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் - காயமுற்ற முஸ்லிம்கள் மீது காஃபிர்கள் மீண்டும் திரும்பி வந்து தாக்குதல் நடத்தி விடக்கூடாதே, சிறிதளவு இருக்கக்கூடிய முஸ்லிம்கள் அவர்களின் கைகளால் ஷஹீதாகிவிடக்கூடாதே என்று நினைத்த ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் - ஏக இறைவனின் கண்ணியம் குறித்த கேள்வி எழுந்த போது, இணைவைத்தலின் முழக்கம் மைதானத்தில் முழங்கப்பட்டபோது பெருமானார் (ஸல்) அவர்களின் ஆன்மா நிம்மதி இழந்து போனது. அன்னார் மிகவும் உத்வேகத்துடன் சஹாபிகளைப் பார்த்து, நீங்கள் ஏன் பதில் கொடுப்பதில்லை என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் என்ன கூற வேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள். 'ஹுபல் சிலையின் மகிமை உயர்ந்தது என்று நீங்கள் பொய் கூறுகிறீர்கள்! இது உங்களுடைய பொய்யாகும். ஏக இறைவனாகிய, இணையற்றவனாகிய அல்லாஹ்தான் கண்ணியத்திற்குரியவன் ஆவான்; அவனுடைய

மகிமைதான் உயர்ந்ததாகும்’ என்று பதிலளிக்குமாறு கூறினார்கள். இவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்கள் தாம் உயிருடன் இருக்கக்கூடிய செய்தியை எதிரிகள் வரை சென்றடையச் செய்து விட்டார்கள். இந்தத் துணிச்சலான, தைரியமான பதில் காஃபிர்களுடைய படையின் மீது எந்த அளவு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், அவர்களுடைய எதிர்பார்ப்புகள் இதனால் மண்ணாகிப் போய்விட்டன. அவர்களுக்கு முன்னால் சொற்ப எண்ணிக்கையைக் கொண்ட, காயமுற்றிருந்த முஸ்லிம்கள் இருந்த போதிலும், அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து அவர்களைக் கொன்று விடுவது உலக நியதிக்கேற்ப முற்றிலும் சாத்தியமானதாக இருந்த போதிலும், அவர்கள் மீண்டும் தாக்குதல் தொடுக்க துணியவில்லை. எந்த அளவு அவர்களுக்கு வெற்றி கிடைத்ததோ அதை மகிழ்ச்சியுடன் கொண்டாடியவாறு மக்காவுக்கு திரும்பிச் சென்று விட்டார்கள்.”

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் பல்வேறு கோணங்களில், பல்வேறு இடங்களில் இந்த சம்பவத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். இந்த சம்பவங்களை இன்ஷா அல்லாஹ் இனிவரும் காலத்திலும் எடுத்துக் கூறுவேன்.

பொதுவாக நான் துஆவுக்காக கூறுவது போன்று இப்போதும் கூறிக் கொள்கிறேன். பாலஸ்தீனர்களுடைய பொதுவான சூழ்நிலைகளுக்காக துஆக்களை செய்து கொண்டிருங்கள். காஸாவில் போர் நிறுத்தத்திற்கான முயற்சி மேற்கொள்ளப்படுவதாக கேள்விப்பட்டேன். இஸ்ரேலிய அரசாங்கமும் ஓரளவுக்கு இதை ஒப்புக்கொண்டு விடலாம். ஆனால் லெபனானுடைய எல்லைப் பகுதியில் போர் மூள்வதற்கான வாய்ப்புகள் அதிகமாகிக் கொண்டே செல்கின்றன. இதனுடைய தாக்கம் **west bank** பகுதியில் உள்ள பாலஸ்தீனர்கள் மீதும் ஏற்படலாம். மேற்கத்திய அரசாங்கங்களிடத்தில் நீதியின் எந்தவோர் அம்சமும் தென்படுவதில்லை. ‘உச்சபட்ச அநீதி நடக்கிறது’ என்று இப்பொழுது அவர்களில் இருந்து எழுதக்கூடியவர்களே மேற்கொண்டு பகிரங்கமாக எழுத ஆரம்பித்து விட்டார்கள். அமெரிக்காவின் தலைவர்கள் தம்முடைய வாழ்வாதாரத்தை சிறந்ததாக்குவதற்காக இந்தப் போர்களைத் தூண்டிக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாகவே அவர்களுடைய வருமானம் அதிகரிக்கிறது. ஏனென்றால் அவர்களுடைய ஆயுதக் கிடங்குகளில் அதிகமான உற்பத்திகள் நடக்கின்றன. ‘அமெரிக்கா தன்னுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்தப் போரை நீட்டிக்க முயற்சி செய்கிறது; உலகில் குழப்பத்தைப் பரப்புகிறது’ என்று இப்போது அவர்களுடைய ஆய்வாளர்கள் கூட கூற ஆரம்பித்து விட்டார்கள். இறைவனுடைய பிடியிலிருந்து இம்மக்கள் தப்ப முடியாது என்று இவர்களுக்குத் தெரியவில்லை.

எவ்வாறாயினும், அஹ்மதிகள் தம் துஆக்களிலும், தம் தொடர்புகளிலும் அழிவில் இருந்து தப்பிப்பதற்காக தமது பங்களிப்பை வழங்க வேண்டும். **U.N** உடைய உதவி செய்யக்கூடிய ஏஜென்சிக்கு அமெரிக்கா மற்றும் யூ.கே போன்றவை பொருளாதார உதவியை நிறுத்தி விட்டன. ஏனென்றால், அவர்களில் **11** அல்லது **12** பேர் ஹமாஸுடன் இணைந்துள்ளார்கள் என்ற காரணத்திற்காக உதவியை மறுத்து விட்டதாக கடந்த நாட்களில் இந்த செய்தி வந்தது. இதன் காரணமாக பாலஸ்தீனர்களுக்கு உதவி செய்யக் கூடாது என்ற அநீதியும் உருவாகியுள்ளது. அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்; வேறு எந்தக் காரணமும் கிடையாது! ஆனால் வியப்பு என்னவென்றால், மேற்கத்திய நாடுகள் உதவியை நிறுத்திக் கொண்டு விட்டார்கள் என்றால், எண்ணைய் வளம் கொண்ட

முஸ்லிம் நாடுகள் நாங்கள் உதவி செய்வோம் என்று கூறுவதாக எந்தச் செய்தியும் இல்லை!

எவ்வாறிருப்பினும், இந்த முஸ்லிம் நாடுகளுக்கு தம் பங்களிப்பை செலுத்துவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்குவானாக! உலகில் உள்ள குழப்பங்களும் முடியட்டுமாக!

இப்பொழுது ஈரானுடனும் போருக்கான ஆபத்து அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அதேபோன்று, ஏமனுடைய அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். நம்முடைய ஒரு தூய அஹ்மதியும் அங்கு சிறைபிடிக்கப்பட்ட நிலையிலோ அல்லது கண்காணிப்பில் வைக்கப்பட்ட நிலையிலோ சரியான சிகிச்சை கிடைக்காததன் காரணமாக மரணமடைந்துள்ளார். அதனுடைய (செய்தி) விபரங்கள் எளிதில் கிடைப்பதில்லை! எவ்வாறிருப்பினும், சிரமங்களில் சிக்கி உள்ள அந்த மக்களுக்காகவும் துஆ செய்யுங்கள். மேற்கொண்டு விபரங்கள் கிடைத்த பிறகு மர்ஹூமுடைய ஜனாஸாவையும் தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ்!

பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள்! தன்னுடைய அரசியல் இலாபங்களுக்காக எப்பொழுதும் அஹ்மதிகள் குறிவைக்கப்படுகிறார்கள். அதேபோன்று சில பயங்கரவாத அமைப்புகள் சார்பாகவும் ஜமாஅத்துக்கு ஆபத்து உள்ளது. (அங்கு) எல்லா இடத்திலும் நம்முடைய ஜமாஅத்திற்கு இரண்டு விதமான ஆபத்துகள் உள்ளன. ஒன்று, குடிமக்கள் என்ற அடிப்படையில்; இன்னொன்று அஹ்மதி என்ற அடிப்படையில். ரப்வா மற்றும் பிற நகரங்களில் வசிக்கக்கூடிய அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களைத் தன் பாதுகாப்பில் வைப்பானாக! விஷமிகளுடைய விஷமத்தனத்தை அவர்களின் மீதே திருப்புவானாக! அல்லாஹ் எல்லா நாட்டிலும் அஹ்மதிகளைப் பாதுகாப்பானாக! அல்லாஹ்வின் பக்கம் திரும்பாத வரை எந்தவொரு வழியும் எஞ்சி இருக்க முடியாது என்ற உண்மையையும், அல்லாஹ்வை அடையாளம் கண்டு கொள்வதிலும் அவனால் அனுப்பப்பட்டவரை ஒப்புக் கொள்வதிலும்தான் அவர்களின் நிலைத்திருத்தல் உள்ளது என்பதையும் உலகம் அறிந்து கொள்ளட்டுமாக! அல்லாஹ் அவர்களுக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**